


# மனித உரிமை மீறல்களுக்கான நீதி: CCIJ உங்களுக்கு எவ்வாறு உதவமுடியும்?

## ▶ CCIJ என்பது என்ன?

சர்வதேச நீதிக்கான கனேடிய நிலையம் என்பது ஒட்டாவாவில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட தேசிய, தர்ம நோக்கம் கொண்ட, மனித உரிமைகள் அமைப்பாகும். CCIJ இனப்படுகொலை, சித்திரவதை மற்றும் இது போன்ற கொடுமைகளுக்கு நீதி வழங்குதல் அத்தோடு குற்றம் செய்தவர்களை நீதிக்கு முன் கொண்டுவருதல் போன்ற நோக்கங்களுக்காக செயல்படுகிறது. நாங்கள் ஒரு சுதந்தரமான, லாபத்திற்கு இயங்காத ஒரு குழுவாகும், அத்தோடு கனடா அரசுடன் நாங்கள் தொடர்புடையவர்கள் அல்ல.

## ▶ CCIJ யின் சேவைகளால் யார் பயன் அடையலாம்?

மனித உரிமைகள் மீறல்களுக்கு உள்ளானவர்கள் அல்லது மனித உரிமைகள் மீறல்களினால் இறந்துபோனவர்களுக்கு நெருங்கிய உறவுடையவர்கள் அல்லது வேறு காரணங்களுக்காக எம்மோடு தொடர்புகொள்ள முடியாதவர்களே CCIJ யின் வாடிக்கையாளர்கள் (clients) ஆவர்.

## ▶ CCIJ என்ன செய்கிறது?

வாடிக்கையாளர்களுக்கு நீதி கிடைப்பதற்கான சரியான வழி முறைகளைக் கண்டடையவும் மதிப்பீடு செய்யவும் தேவையான தகவல்களை வழங்கும் ஒரு மூலவள நிலையமாக CCIJ இருக்கிறது. அத்தோடு குற்றவாளிகளையும் நீதிக்கு முன்னால் கொண்டுவர நாங்கள் முயற்சிகள் செய்வோம். மனித உரிமை மீறல்கள் புரிந்த ஒருவர் கணடாவில் வசிக்கின்றார் அல்லது கனடாவிற்கு வருகின்றார் அல்லது இப்படிப்பட்ட ஒரு குழுவோ அல்லது ஒரு கம்பனியோ இங்கு வர்த்தகம் செய்கின்றது என்ற தகவல் CCIJ க்கு கிடைத்தால், ஒரு விசாரணையை ஆரம்பிக்க எங்களால் முடியும். குற்றம் புரிந்ததாக கருதப்படும் ஒருவருக்கு எதிராக வழக்கொன்றைத் தொடர்வதே அதிகம் விரும்பப்படும் ஒரு வழியாகும். CCIJ ஆரம்ப விசாரணையை செய்த பின்பு, ஒருவர் இந்த விஷயத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல விரும்பினால், இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க சரியான ஆட்களிடமோ அல்லது அலுவலகத்திடமோ ஒருவரை CCIJ வழிநடத்தும். CCIJ சட்டபூர்வமான பிரதிநிதித்துவம் வழங்காவிட்டாலும்கூட வழக்கில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதோடு, ஒருவரை தேவைப்படும் படிமுறைகளின் ஊடாக வழி நடத்தும்.

## ▶ என்ன வடிவுகளிலான நீதியை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்?

வாடிக்கையாளர்கள் பின்வரும் நீதி வடிவங்களை அடைய CCIJ உதவ முடியும்:

**கனடாவிலும் வெளி நாடுகளிலும் கிறிமினல் வழக்குகள்** CCIJ நடத்தும் விசாரணையின் விவரங்கள், கனேடிய அரசு, வெளி நாட்டரசு அல்லது சர்வதேச நீதிமன்றங்கள் போன்றவற்றில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிரான வழக்கில் பாவிக்கப்படக்கூடும். போதிய தடையங்களை ஒரு விசாரணை வெளிப்படுத்தும் அதே வேளையில், ஒருவர் கிறிமினல் வழக்குத் தொடர விரும்பினால், பொறுப்பான அதிகாரிகளை நாங்கள் தொடர்புகொள்வோம். வழக்கொன்றைத் தொடர அரசாங்கம் அல்லது நீதிமன்றம் உண்மையான விருப்பம் தெரிவித்தால், வாடிக்கையாளர்கள் சரியான அதிகாரிகளைத் தொடர்புகொள்ள உதவி, தான் சேகரித்த தகவல்களை CCIJ அந்த அதிகாரிகளுக்கு வழங்கும். ஒரு வழக்கு ஒரு அரசாங்கத்திடமோ நீதிமன்றத்திடமோ தரப்பட்ட பின்பு, இது திறமான மற்றும் நியாயமான வழியில் கொண்டு நடத்தப்படுகிறதா என்பதை நாங்கள் அவதானித்து தேவைப்படும் பட்சத்தில் சட்டத்தரணிகளுக்கு தேவையான சிபாரிசுகளையும் செய்வோம்.

**கனடாவில் சிவில் வழக்குகள்** CCIJ நடத்தும் விசாரணைகள், வழக்கொன்றைத் தொடர்ந்து வாடிக்கையாளர்கள் நஷ்டயீடு கோருவதற்கு வழி நடத்தக்கூடும். போதிய தடையங்களை ஒரு விசாரணை வெளிப்படுத்தும் அதேவேளை ஒருவர் சிவில் வழக்குத் தொடர விரும்பினால், கட்டணம் எதுவுமில்லாமல் இதை செய்வதற்கு ஒரு சட்டத்தரணியைக் கண்டடைய நாங்கள் உதவி செய்வோம்.

**சொந்த நாட்டிற்கு திருப்பியனுப்புதல்** வாடிக்கையாளர் ஒருவர் விரும்பினால் அல்லது வழக்குத் தொடர கனடா நாட்டிற்கு விருப்பமில்லை அல்லது இயலவில்லை என்றால், வெளி நாட்டு அல்லது சர்வதேச வழக்குகளை CCIJ ஆதரிக்கிறது. வேறு நாடுகளால் நடவடிக்கை எடுக்க முடியாத அல்லது விரும்பாத சந்தர்ப்பத்தில், குற்றம் செய்தவர்களுக்கு எதிராக கிறிமினல் வழக்குத் தொடர அவர்களை கனடாவிற்கு கொண்டுவருவதை CCIJ ஆதரிக்கிறது.

**குடியுரிமை பறித்தல், திருப்பியனுப்பப்படுதல் மற்றும் தள்ளிவைக்கப்படுதல்** மனித உரிமை மீறல் குற்றம் புரிந்தவர்களுக்கு வேறு எந்த வழியிலும்

நீதி சரிக்கட்டப்பட முடியாதுபோனால் மட்டுமே இமிக்கிரேஷன் தண்டனைகளை CCIJ ஆதரிக்கிறது. திருப்பியனுப்புதல், இன்னுமதிக மனித உரிமை மீறல்களை ஏற்படுத்தும் அல்லது குற்றம் புரிந்தவர் சட்டத்திலிருந்து தப்பிக்கொள்ள இடமளிக்கும் என்றால், CCIJ திருப்பியனுப்புதலை எதிர்க்கிறது.

வாடிக்கையாளர்களுக்கு நஷ்டயீடு பாதிக்கப்பட்டோர் ஆதரவு நிதி மூலமாக வாடிக்கையாளர் நஷ்டயீடு கோர CCIJ உதவுகிறது.

விழிப்புணர்வுப் பிரச்சாரம் கனடாவில் மனித உரிமை மீறல் குற்றவாளிகள் இருப்பதை மற்றும் தண்டனையிலிருந்து தப்பித்து இருப்பதை பொது மக்களுக்கு தெரியப்படுத்தும் வேலையையும் CCIJ செய்கிறது.

## ▶ என்ன வகையான மனித உரிமை மீறல் குற்றம் செய்தவர்களை CCIJ விசாரிக்கிறது?

CCIJ யின் அநேகமான விசாரணைகள் மனித உரிமை மீறல் குற்றம் புரிந்த தனி நபர்கள் சம்பந்தமானது. வெளி நாட்டு அரசுகள், கனேடிய அரசு, காபரேஷன் மற்றும் வேறு அமைப்புகள் அதாவது ஆயுதம் தரித்த குழுக்கள் போன்றவைகளின் குற்றங்களையும் நாங்கள் விசாரணை செய்கின்றோம்.

## ▶ என்ன வகையான மனித உரிமை மீறல்களை CCIJ விசாரிக்கிறது?

துரதிஷ்டவசமாக, எல்லா வகையான குற்றங்களையும் CCIJ விசாரணைசெய்ய முடியாது. எங்களிடம் மட்டான பணவசதி மட்டுமே இருப்பதால் சிறிய எண்ணிக்கையிலான பிரச்சனைகளில் மட்டுமே நாங்கள் கவனம் செலுத்த முடியும். மிக மோசமானதாக உலகம் கருதும் மனித உரிமை மீறல்களையே நாங்கள் விசாரணை செய்கிறோம். சித்திரவதை போன்ற நடத்தைகளுக்கு, அதாவது ஒருவர் சிறையில் இருக்கும் பொழுது, அரசாங்க அதிகாரிகளால் படுமோசமாக நடத்தப்படுதல் மற்றும் சட்டத்திற்கு புறம்பான முறையில் அரசாங்க அதிகாரிகளால் நடத்தப்படும் கொலைகள் போன்றவற்றையே இவை உட்படுத்தும். அரசாங்க அதிகாரிகளால் செய்யப்பட்ட சித்திரவதை அல்லது வேறு மோசமான துஷ்பிரயோகத்தில் பிழைத்தவர் யாராவதிருந்தால் அவருக்கு CCIJ யால் உதவிசெய்ய முடியும். அரசாங்கத்தினால், ஆயுதம் தரித்த குழுவினால் கொல்லப்பட்ட ஒருவருக்கு நீங்கள் மிக நெருங்கிய உறவினர் என்றால், ஒரு விசாரணையை ஆரம்பிக்க CCIJ யால் இயலக்கூடும்.

## ▶ வழக்கு ஆரம்பித்ததும் ஒரு வாடிக்கையாளர் என்ன செய்ய வேண்டும்?

ஒரு வாடிக்கையாளரின் பொறுப்பு, அவர் எத்தகைய வழக்கை அல்லது நடவடிக்கையைத் தொடர தீர்மானிக்கிறார் என்பதைப் பொறுத்தே அமையும். இந்த எல்லா சந்தர்ப்பத்திலும் ஒருவர் தனது பிரத்தியேகத் தகவல் சிலவற்றை மற்றும் தனக்கு நடந்த கதைபற்றிய விவரத்தை CCIJ யிற்கு வழங்கவேண்டும். ஒருவருக்கு நிகழ்ந்த கொடூரமான விஷயங்களைப்பற்றி பேசுவது எவ்வளவு சிரமமானது என்பதை நாங்கள் உணருகிறோம் என்பதால் அதற்கேற்றவாறு உதவியளிப்போம். சாட்சிகளையும் தடையங்களையும் அடையாளம் காண வாடிக்கையாளரால் உதவ முடியும் என்றால் அதை நாங்கள் வரவேற்கிறோம். ஒருவரின் அந்தரங்கத்தைப் பாதுகாக்கும் பொருட்டு CCIJ வலுவான சட்டங்களைக் கொண்டிருக்கிறது. வெளியிடும்படி சட்டமன்றம் ஆணையிட எப்போதுமே ஒரு வாய்ப்பிருக்கின்ற போதிலும், வாடிக்கையாளர்களின் அடையாளங்கள், சாட்சிகள் அல்லது வேறு தொடர்புகள் அல்லது இவர்கள் தரும் இரகசியத் தகவல் போன்றவற்றை, இவர்களுடைய அனுமதியில்லாமல் நாங்களாக வெளிப்படுத்த மாட்டோம். கிறிமினல் வழக்கு, சிவில் வழக்கு அல்லது வேறு எந்த வழக்கையாவது ஒரு வாடிக்கையாளர் தொடர விரும்பினாலும் அவர் அநேகமாக நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னால் வாக்குமூலம் கொடுக்கவேண்டி



வரலாம். வாடிக்கையாளரின் அடையாளங்களை பொதுமக்களிடமிருந்து இரகசியமாகப் பாதுகாப்பது சில நேரங்களில் சாத்தியமிருந்தாலும், வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு குற்றவாளியாகக் கருதப்படுகிறவருக்கு, சாட்சி கொடுக்கப்போகும் நபர்களின் பெயர்களை அறியும் உரிமை இருக்கிறது.

## ▶ ஒரு வழக்கில் பங்குபற்றுவதால் வாடிக்கையாளர்கள் பணம் பெறுவார்களா?

வாடிக்கையாளர் ஒரு சிவில் வழக்கை அல்லது நஷ்டயீட்டு படிமுறையை தொடருவாரானால், அந்த வாடிக்கயாளர் பணம் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது, ஆனால் அப்படி செய்வது மிகவும் கடினம். வாடிக்கையாளர் நஷ்டயீடு பெறுவார் என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை.

## ▶ ஒரு வழக்கு எவ்வளவு காலம் நீடிக்கக்கூடும்?

அநேகமாக எல்லா வழக்குகளுமே முடிவுக்கு வர அதிக காலம் எடுக்கிறது. CCIJ யின் ஆரம்ப விசாரணை பல மாதங்கள் அல்லது ஒரு வருடம் வரை எடுக்கலாம். வழக்கைப் பதிவுசெய்வதற்கு அநேகமாக இன்னும் பல மாதங்கள் எடுக்கலாம். வழக்கைப் பதிவு செய்த பின்பு, செயற்கிரம கால அளவு குற்றம் சுமத்தப்பட்டவர் எவ்வளவு தீவிரமாக வாதாடுகிறார் என்பதைப் பொறுத்தே அமையும். இருப்பினும் எந்த ஒரு வழக்கும் குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு வருடங்கள் அல்லது அதற்கு கூடிய காலத்தை எடுக்கக்கூடும். CCIJ யின் வக்கீல்களோடு வேலை செய்தல் சாட்சி கொடுத்தல், நீதி மன்றத்திற்கு செல்லுதல் அத்தோடு இது தொடர்பான வேறு காரியங்கள் போன்றவற்றிற்கு ஒருவர் ஒரு வருடத்தில் சுமார் 10 நாட்களை செலவிட வேண்டி வரும். வழக்கு அல்லாத வேறு நடவடிக்கைகள், இதை விட குறைந்த கால அளவையே எடுக்கும்.

## ▶ ஒரு விசாரணைக்கு அல்லது ஒரு வழக்கைத் தொடங்க வாடிக்கையாளர் பணம் செலுத்த வேண்டுமா?

இல்லை. விசாரணை அல்லது வழக்குத் தொடர்பான செலவுகளை CCIJ அல்லது வேறு சட்டத்தரணிகள் அல்லது அதிகாரிகள் கவனித்துக்கொள்ளக்கூடும்.

CCIJ யுடன் பேசுவதற்கு தயவுசெய்து சட்ட ஒருங்கிணைப்பாளர் மற் ஐசன்பிரான்ட் என்பவரைத் தொடர்புகொள்ளவும்:

தொலை பேசி மூலம்: (613) 744-7667 ext. 266

மின் அஞ்சல் மூலம்: meisenbrandt@ccij.ca

கடித மூலம்: 312 Laurier Avenue East, Ottawa, Ontario K1N 1H9

CCIJ

நலன்புரி இலக்கம்:
86575 9088 RR 0001

The Law Foundation of Ontario
Building a better foundation for justice in Ontario

Produced with support from the Law Foundation of Ontario.